Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 23 2025

வியாழக்கிழமை, 23 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 143 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# 10 பொருட்களின் விலைகள் குறைப்பு

அத்தியாவசிய 10 பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்கா சதொச தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து லங்கா சதொச கடைகளிலும் இந்தப் பொருட்களை புதிய விலையில் புதன்கிழமை (22) முதல் வாங்கலாம் என்று சதொச மேலும் கூறியுள்ளது.

1,095 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் உள்ளூர் முந்திரி பருப்பு (கஜூ) 100 ரூபாவால் குறைந்து 995 ரூபாவாகும். 340 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் தும்புறு நிற சீனி 40 ரூபாவால் குறைந்து 300 ரூபாவாகவும், 210 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது அதன் புதிய விலை 180 ரூபாயாகும்.

தொடர்ச்சி P2

# ஊடகவியலாளருக்கு திறந்த பிடியாணை

ரீ.எல்.ஜவ்பர்கான் வா.கிருஷ்ணா



மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பான நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏறாவூர் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கில் ஊடகவியலாளர் ஒருவருக்குத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீதிமன்றில் ஆஜராகியிருந்த சந்தேக நபர்கள் 27 பேரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஒக்டோபர் 8 ஆம் திகதி வருகை தந்துள்ளார்.

அப்போது, கொம்மாதுறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் இரண்டு ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 சந்தேக நபர்கள் என குறிப்பிட்டு ஏறாவூர் பொலிஸாரினால் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இந்த வழக்கு புதன்கிழமை (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# “நாட்டின் பாரம்பரியம் முக்கிய அம்சமாகும்”



நடைமுறைச் சட்டங்களினால் மாத்திரம் நாடொன்று முன்னோக்கிச் செல்ல முடியாதெனவும் நாட்டின் பாரம்பரியம் மிக முக்கியமான அம்சமாகும் எனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பௌத்த மதத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட பாரம்பரியத்தின் ஊடாக சிறப்புக்குரிய பணியை ஆற்றியிருப்பதாகவும், அந்த பாரம்பரியத்தைப் பாதுகாத்து எதிர்கால சந்ததிகளிடம் பாதுகாப்பாகக் கையளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# “மு.கா. மரத்தில் போட்டியிடும்”

அபு அலா

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக, ‘தாருஸ்ஸலாம்’ தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) மாலை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமா லெப்பை, எம்.எஸ்.நழீம் உள்ளிட்ட கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கொழும்பு மாவட்ட மத்தியக் குழுக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்ட நேரமாகக் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கொழும்பு, தெஹிவளை-கல்கிஸ்ஸ, கோட்டே, மொரட்டுவை, கொலன்னாவ மாநகர சபைகளுக்கும், கொட்டிகாவத்தை, முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை மு.கா தலைவர் அறிவித்ததோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகளைக் கட்சி உடனடியாக ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# “துப்பாக்கிச் சூடுகளுக்கு தீர்வு காண வேண்டும்”



நாட்டில் கடந்த 2024 இல் 121 துப்பாக்கிச் சூடுகளும் 60 கொலைகளும் நடந்துள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற ‘தூய்மையான இலங்கை’ எனும் வேலைத்திட்டம் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாகத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இலையந்தடியில் 2000 கி.கி. மஞ்சள் மீட்பு



ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி - நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலையந்தடி கடற்கரையோரத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்வதற்குத் தயாராக இருந்த ஒரு தொகை மஞ்சள் மூடைகளுடன் சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாரருக்கு செவ்வாய்க்கிழமை (21) கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கடற்பிரதேசத்திலிருந்து லொறியொன்றின் மூலம் கொண்டு செல்ல தயாராக இருந்த 51 மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 2,000 கிலோ கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சளின் பெறுமதி 1.2 மில்லியன் ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# கார் விபத்தில் ஒருவர் மரணம்

நவி


கம்பளை-கண்டி பிரதான வீதியில் குருதெனிய எனும் பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது கார் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் கம்பளை, கிராஉல்ல பகுதியைச் சேர்ந்த மதுர கீர்த்தி குணசேகர (வயது 58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேசன் வேலை, மின்சார தொழில் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள அவர், கெலிஓயா பகுதியிலுள்ள கிராம கோவிலுக்கு புதன்கிழமை (22) அன்னதானம் செய்து விட்டு பின்னர் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# இந்திய பிரஜையின் பொதியுடன் ஒருவர் கைது



ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த இந்தியப் பிரஜை ஒருவரின் பயணப் பொதியை திருடிய சந்தேக நபர் ஒருவர் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் புதன்கிழமை(22) கைது செய்யப்பட்டு ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

# “ரஷ்ய இராணுவத்தில் இருந்து எம்மவர்களை மீட்டெடுங்கள்”

வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ள தமிழ் ,சிங்கள இளைஞர்களை மீட்பதற்கு அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட எம்.பி. எஸ். சிறீதரன் சபையில் கேள்வியெழுப்பினார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தங்களின் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ்,

தொடர்ச்சி P2

# “கல்முனை விவகாரத்துக்கு விரைவில் இறுதி முடிவு”

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடி இறுதி முடிவை விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.என்.எச். அபயரட்ண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

# “தேயிலைக்கு நிதி ஒதுக்கப்படும்”

நாட்டின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் தேயிலைத் தோட்டங்களை முன்னேற்றும் வேலைத்திட்டங்களுக்கு இம்முறை அதிக நிதியை ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஊடகவியலாளருக்கு திறந்த பிடியாணை

பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் பாராளுமன்ற அமர்வு காரணமாக நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை என நீதிவானின் கவனத்திற்கு சட்டத்தரணியால் கொண்டுவரப்பட்டது. இதேபோன்று, ஏற்கெனவே நீதிமன்றுக்கு சமூகமளிக்காத நிலையில், பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன், வெளிநாடு சென்றுள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு பொலிஸாரினால் கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில், ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரனுக்கு



திறந்த பிடியாணை பிறக்கப்பட்டதுடன், குடிவரவு-குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், நீதிமன்றில் முன்னிலை ஆகியிருந்த 27 பேருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்கும் நிபந்தனையுடன் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

அத்துடன், குறித்த வழக்கு ஏப்ரல் 21க்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கில் தொடர்புடைய 30 பேரில் இருவர் மன்றுக்கு சமூகமளிக்காமையினால் அடுத்த வழக்கில் தொடர்புடைய அனைவரையும் ஆஜராகும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



# 10 பொருட்களின் விலைகள் குறைப்பு

795 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சிவப்பு பட்டாணி (சிவப்பு கௌபி), 30 ரூபாவாக குறைந்து 765 ரூபாவாகவும்,

960 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் நெத்தலி, 20 ரூபாவாக குறைந்து 940 ரூபாவாகவும் உள்ளது.

845 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாய்,15 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 830 ரூபாவாகும்,

ஒரு கிலோவின் விலை 655 ரூபாவாக இருந்த பாஸ்மதி அரிசியின் புதிய விலை 645 ரூபாவாக உயர்ந்தது.

655 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கிராம் பாஸ்மதி அரிசியின் விலை 10 ரூபாய் குறைக்கப்பட்டதன் மூலம், அதன் புதிய விலை 645 ரூபாயாக மாறியுள்ளது.

240 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 230 ரூபாயாகும். அத்துடன், 290 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கிராம் பருப்பு 2 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 288 ரூபாகும். 242 ரூபாயாக இருந்த வெள்ளை சீனி ஒரு கிலோ கிராம் 2 ரூபாவால் குறைக்கப்பட்டு 240 ரூபாய்க்கும் விற்பனைச் செய்யப்படுகின்றது.

# இலையந்துடியில் 2000 கி.கி. மஞ்சள் மீட்பு



கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சளையும் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தெடார்பில் நுரைச்சோலை பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கார் விபத்தில் ஒருவர் மரணம்

தெல்கொட பகுதியிலிருந்து கம்பளை நோக்கி வந்த இந்த கார், வீதியை விட்டு விலகி, சைக்கிள் ஓட்டுநர் மீது மோதி அருகில் வியாபார நிலைய கட்டிடத்தின் ஓரத்தில் மோதியுள்ளது. ஓட்டுநரின் நித்திரை கலக்கத்தால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் யார்? என்பதை அறிய முடியவில்லை. மோட்டார் சைக்கிளின் காப்பீட்டுச் சான்றிதழை மட்டும் பயன்படுத்தி மோட்டார் சைக்கிள் செலுத்தப்பட்டுள்ளது என்று கம்பளை குருந்துவத்த பொலிஸார் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பேராதனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தவுலகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# “ரஷ்ய இராணுவத்தில் இருந்து எம்மவர்களை மீட்டெடுங்கள்”

சிங்கள இளைஞர் சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமான முறையிலும் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படும் போது, வெளிநாட்டு முகவர்களினால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகியுள்ளன.

இந்த நாட்டுத் தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் இவ்வாறு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் எம்மிடம் முறையிட்டு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்துகிறார்கள்.

இதற்கமைய அதிர்ஷ்ட ராஜா கேமஸ் விதூஷன் - யாழ்ப்பாணம், பகீரதன் - கரவெட்டி, சுந்தரலிங்கம் பாலச்சந்திரன் - முல்லைத்தீவு, பிரதாப் - யாழ்ப்பாணம், சிவேஸ் - யாழ்ப்பாணம், ஆகிய தமிழ் இளைஞர்கள் முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2022.10.20 ஆம் திகதி ரஷ்யா - பெலராஸ் எல்லையில் விஜயகுமார் முகுந்தன் என்பவர் காணாமல் போயுள்ளார். இவருக்கு நேர்ந்தது என்னவென்பது இதுவரை தெரியவில்லை. ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கையரின் எண்ணிக்கை, உயிரிழந்துள்ளவர்களின் விபரம் மற்றும் இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றார்.

# “நாட்டின் பாரம்பரியம் முக்கிய அம்சமாகும்”

இலங்கை ராமண்ய பீடத்தின் 74 ஆவது உப சம்பதா அரச நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (22) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்திற்குள் காணப்படும் முக்கிய நிகழ்வான உபசம்பதா நிகழ்வின் வரலாற்று முக்கியத்துவத்தை இதன்போது நினைவுகூர்ந்த ஜனாதிபதி, உபசம்பதா முறை தடைப்படுவது முழு பௌத்த அமைப்பினதும் சிதைவாக அமையும் என்றும், இந்த வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து கௌரவத்துடன் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இலங்கை ராமண்ய பீடத்தினால் நடத்தப்படும் உபசம்பதா தேசிய நிகழ்வு 2025 ஜூன் 30 ஆம் திகதி முதல் ஜூலை 05 வரையில் விஜிதபுர, பழுகஸ்வெவ, புண்யவர்தனாராம விகாரையை மையப்படுத்தி உதகுக்கேப சீமாமாலக்கயவில் நடத்தப்படவுள்ளது. 250கும் அதிகமான இளம் பிக்குகளுக்கான உபசம்பதா நிகழ்வு அரசாங்க அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இலங்கை ராமண்ய மகா பீடத்தில் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உப சம்பதா நிகழ்வு ஒரு கௌரவ நிகழ்வாக அரசாங்கத்தினால் கருதப்படும் நிலையில், அதற்கு அவசியமான வசதிகளைத் தயக்கமின்றி செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

பௌத்த மத பாரம்பரியத்தைப் பாதுகாப்பதன் ஊடாக சமூக மலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும், இவ்வாறான மத நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் சமூகத்தின் மலர்ச்சியை மேலும் வலுப்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

# “கல்முனை விவகாரத்துக்கு விரைவில் இறுதி முடிவு”

கல்முனை வடக்கு உட்பட 28 உதவி அரசாங்க முகவர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாகத் தொழிற்படும் வகையில் மாற்றியமைப்பதற்காக 1993.07.28ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட போதும் இதுவரையில் அந்த அலுவலகம் உப பிரதேச அலுவலகமாகவே செயற்படுகின்றது. கல்முனை - வடக்கு பிரதேச செயலகமானது, கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் ஓர் உப அலுவலகமாக இப்போதும் செயற்படுவதுடன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்காகப் பிரதேச செயலாளர் பதவிக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதற்காக உதவி பிரதேச செயலாளர் பதவி மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன், இப்போது அவர் கடமையாற்றுகின்றார். இதனால் கல்முனை வடக்கு உப அலுவலகத்தை தரமிறக்க முயற்சிக்கப்படவில்லை.

கல்முனை - வடக்கு பிரதேச செயலகமானது, உப பிரதேச செயலக அலுவலகமாக இப்போது செயற்படும் நிலையில் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றார்.

# இந்திய பிரஜையின் பொதியுடன் ஒருவர் கைது

உடரட்ட மெனிகே ரயிலின் மூன்றாவது பெட்டியில் பயணித்த இந்திய பிரஜையின் பொதி, இகுருஓயா மற்றும் கலபட ரயில் நிலையங்களுக்கு இடையில் காணாமல் போயுள்ளது. இதுதொடர்பில், ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் அந்த இந்திய பயணி முறையிட்டுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகள், காணாமல் போன இந்திய பிரஜையின் பயணப்பொதியுடன் சந்தேக நபரை கைது செய்து, ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபர், மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், அவர் கண்டியிலிருந்து ஹட்டனுக்கு ரயிலில் பயணிக்க அனுமதிச் சீட்டைப் பெற்றிருந்ததாகவும் தெரிவித்தனர்.

# “தேயிலைக்கு நிதி ஒதுக்கப்படும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் லால் பிரேமநாத் எம்பி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தேயிலைத் துறை உள்ளிட்ட பயிர்ச்செய்கை துறைகளுக்கு தேவைப்படும் உரத்தை பெற்றுக் கொடுப்பதற்காக ரஷ்யாவிடமிருந்து 55 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். அதேவேளை,அரசாங்கம் நிதி அமைச்சுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத்துறை மற்றும் சிறு தேயிலை தோட்ட முன்னேற்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க தீர்மானித்துள்ளது.

தேயிலை பயிர்ச்செய்கை துறை நாட்டுக்கு பாரிய வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் துறை . இதில் நூற்றுக்கு 75 வீதமான தேயிலையை சிறு தேயிலை தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களே வழங்குகின்றனர். அந்த வகையில் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டிய தேவை உள்ளது.

சில இடங்களில் அந்த நடவடிக்கைகள் காலாவதியாகி மீள் நடுகை திட்டங்களை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது.ஒரு ஏக்கரில் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு 9 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அந்த வகையில் இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு பகுதியினருக்கு அதற்கான ஒத்துழைப்புகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றார்.

# “துப்பாக்கிச் சூடுகளுக்கு தீர்வு காண வேண்டும்”



கொலைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை, கடத்தல் அதிகரித்துள்ளன. கடவுச்சீட்டுப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இதற்கு நிகழ்நிலை முறை அறிமுகப்படு த்தப்பட்டாலும், நிகழ்நிலை முறையிலான விண்ணப்பங்களுக்கும் வரிசைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு விரைவான தீர்வுகள் அவசியம். தேங்காய் எண்ணெய் இறக்குமதி விடயத்தில் 2024 ஜனவரி முதல் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டன. சுத்திகரிக்கப்பட்டு விற்பனை செய்யும் போது 18வீதம் பெறுமதி சேர் வரியும் 2.5 வீதம் சமூக பாதுகாப்பு வரியும் விதிக்கப்பட்டாலும், இவ்வாறு சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்து பின்னர், சுத்திகரித்து சந்தைப்படுத்துவதில் அரசுக்குச் சேர வேண்டிய வரிகள் கிடைக்கவில்லை. இது 5 பில்லியனாக ரூபாவாக காணப்படுகின்றன. இது தொடர்பில் தீர்வு காணப்பட வேண்டும்.

துறைமுகத்தில் கொள்கலன் அகற்றும் பணி துரிதமாக இடம்பெறாமையினால், கொள்கலன் தாங்கி வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக ஏராளமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை விட்டு வெளியேறியுள்ளன. இன்னும் 4,000 கொள்கலன்கள் இங்கு காணப்படுகின்றன. இதற்கு அரசாங்கம் அவசர தீர்வுகளைக் காண வேண்டும் என்றார்.

# மருதானை பொலிஸ் கூண்டியில்வ வுனியா பெண்ணின் சடலம்

கொழும்பு-10, மருதானை பொலிஸ் நிலைய சிறை கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண் ஒருவர் சடலமாக புதன்கிழமை(22) மீட்கப்பட்டுள்ளார்.மருதானை பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (21) கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலைய சிறை கூண்டில் இந்தப் பெண் தடுத்து வைக்கப்பட்டு இருந்துள்ளார்.

எனினும், புதன்கிழமை (22) அதிகாலை, 4 மணியளவில் பொலிஸ் நிலைய சிறை கூண்டிலிருந்து அப்பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அப்பெண், தான் அணிந்திருந்த ஆடையைக் கிழித்து, தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# அர்ச்சுனாவுக்கு அடித்தது ‘லோச்சனா லக்’

அனுராதபுரம் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து, அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக அர்ச்சுனா ராமநாதனுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்கில் தான் சந்தேக நபர் என்று கூறி யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றத்தில், புதன்கிழமை (21) ஆஜரானார்.

இருப்பினும், அனுராதபுரம் தலைமை அதிகாரி இந்த வழக்கில் அவரை சந்தேக நபராக ஏற்றுக்கொள்ள நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூர்யா அதை கடுமையாக மறுத்து விட்டார்.

சந்தேக நபர் ராமநாதன் அர்ச்சுனா என்ற பெயரில் தனது தேசிய அடையாள அட்டையுடன் நீதிமன்றத்தில் ஆஜரான போதிலும், இந்த சம்பவம் தொடர்பாக அனுராதபுரம் காவல்துறையினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அசல் ‘பி’ அறிக்கையில் சந்தேக நபரின் பெயர் அர்ச்சுனா லோச்சனா என்று பட்டியலிடப்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

அதன்படி, செவ்வாய்க்கிழமை (21) நீதிமன்றத்தில் ஆஜரான சந்தேக நபரின் பெயருக்கும், பி அறிக்கையில் பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெயருக்கும் இடையில் முரண்பாடு இருப்பதால், ராமநாதன் அர்ச்சுனா சந்தேக நபராக ஆஜராவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நீதவான் கூறினார்.

# “மிகுதி வீடுகளை இடிக்காதீர்கள்”

நீதிமன்ற உத்தரவின் பேரில், கொலன்னாவையில் இடிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பியான எஸ்.எம்.மரிக்கார், மிகுதி வீடுகள், வியாழக்கிழமை (23) இடிக்கப்படவுள்ள நிலையில் அதனை நிறுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற வாய்மூடி விடைக்கான வினா நேரத்தின்போது இடையீட்டுக் கேள்வியை எழுப்பியபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறியுள்ளதாவது, கொலன்னாவை 101ஆம் தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (21) அன்று 5 வீடுகள் நகர அபிவிருத்தி அதிகார



சபையினால் இடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மக்களுக்கு வீடு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் அங்குச் செல்லாமல் இருப்பதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. அது முற்றிலும் பொய். அந்த இடத்தில் 118 வீடுகள் இருந்தன. கடந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சரத் வீரசேகர அந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக 10 இலட்சம் ரூபாய் முற்பணமாகச் செலுத்தும் நிவாரண திட்டம் ஒன்றை முன்னெடுத்தார்.

கூலித் தொழில் செய்து உழைக்கும் அந்த மக்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு முடியாது. அதனால் மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டபோது, 5இலட்சம் ரூபாய் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. ஒரு லட்சம் ரூபாய் கூட செலுத்த முடியாத நிலையிலேயே அந்த மக்கள் இருக்கின்றனர். இந்நிலையில், வியாழக்கிழமை (23)மேலும் 15 வீடுகள் இடிக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளை இழந்த மக்கள் அந்த இடங்களில் தரையில் அமர்ந்திருக்கின்றனர். அதனால் இந்த மக்கள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் அணுகி , வீட்டுத்திட்டத்தில் எஞ்சியிருக்கும் வீடுகளை அந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள் என்றார்.

## மாணவர் ஒன்றுகூடல்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கொழும்புப் பிரிவு (Alumni Association of the University of Peradeniya, Colombo Chapter )உறுப்பினர்களின் வருடாந்திர ஒன்றுகூடல் மற்றும் விருந்துபசாரம் டி.ஆர். கொழும்பு 10, விஜேவர்தன மாவத்தை (மெக்கல்லம் வீதி), நோம் நோம் தாய் (செர்-நோர்) உணவகத்தில் பெப்ரவரி 01ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி மாலை 4:30 மணிக்கு தொடங்குகிறது. நேரடி இசையுடன் பல பொழுதுபோக்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலதிக தகவலுக்கு அல்லது முன்பதிவு செய்ய, குமுதினி குலதுங்கவை 071 4493101 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

AAUPCC

நிகழ்வு நடைபெறும் நாளன்று வாயிலிலும் டிக்கெட்டுகளை வாங்கலாம்.

## திடீர் தீயில் 4 வீடுகள் எரிந்தன

**செ.தி.பெருமாள்**



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ப்ரௌன்ஸ்வீக் தோட்ட பிரிவில் உள்ள தொடர் குடியிருப்பில் செவ்வாய்க்கிழமை (21) இரவு 9 மணிக்கு ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், நான்கு குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன.

ஏனைய 12 குடியிருப்பு பகுதிக்கு தீ பரவாமல் தோட்ட மக்கள் மற்றும் மஸ்கெலியா பொலிஸார் போராடி தடுத்து நிறுத்தி உள்ளனர். 16 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

அந்த 16 குடியிருப்பு பகுதியிலிருந்த மக்கள் தங்களது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

## வாய்க்காலில் விழுந்த கெப்

**எஸ்.கீதபொன்கலன், அ.அச்சுதன்**



மூதூர் பொலிஸ் பிரிவின் இருதயபுரம் (பச்சநூர்) பகுதியில் உள்ள வாய்க்காலுக்குள் புதன்கிழமை (22) காலை சிறிய ரக கெப் வாகனம் ஒன்று புரண்டு விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து சம்பவத்தில் வாகனத்தில் பயணித்தோர் சிறிய காயங்களுடன் தெய்வாதீனமான முறையில் உயிர் தப்பியுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த கெப் ரக வாகனமே இந்த விபத்தை எதிர்கொண்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹட்டனில் ‘கரப்பான் பூச்சி’ சோறு

**ரஞ்சித் ராஜபக்ஷ**



ஹட்டன் நகர மையத்தில் உள்ள உணவகம் ஒன்றில் சாப்பிட்ட வாடிக்கையாளரின் சோற்றில் கரப்பான் பூச்சி இருப்பது செவ்வாய்க்கிழமை (21) கண்டறியப்பட்டுள்ளது.

அந்த உணவக உரிமையாளருக்கு எதிராக, இந்த மாதம் 31ஆம் திகதி ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் சௌந்தர் ராகவன் தெரிவித்துள்ளார்.

குறித்த வாடிக்கையாளர் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, தட்டில் இறந்த கரப்பான் பூச்சி இருப்பதாக உணவக ஊழியர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வாடிக்கையாளர் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு (119) தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து, ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் உணவகத்திற்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து ஹட்டன் டிக்கோயா நகரசபை மற்றும் பொது சுகாதார பரிசோதகருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உணவகத்தைச் சுகாதாரமற்ற முறையில் பராமரித்தல் உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளின் பேரில் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் உணவக உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். மேலும், பல உணவக உரிமையாளர்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கத்திக்குத்தில் சகோதரன் பலி

**எச்.எம்.எம்.பர்ஸான்க**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் புதன்கிழமை (22) காலை கத்திக் குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

உடன்பிறந்த சகோதரர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடே இச் சம்பவத்துக்குக் காரணம் என விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இதில், தம்பிக்காரன் தனது 43 வயதுடைய சகோதரனைக் குத்திக் கொலை செய்துள்ளார்.

கத்திக் குத்துக்கு இலக்கான நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சகோதரனைக் குத்திக் கொன்ற சகோதரன் தலைமறைவாகியுள்ளார்.

அவரை கைது செய்ய வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமி துஷ்பிரயோகம்: குடும்பஸ்தர் கைது

**செ.தி.பெருமாள்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள பிரவுன்ஸ்வீக் தோட்ட பிரவுன்ஸ்வீக் பிரிவில் வசிக்கும் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள குடும்பஸ்தர், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக அதே தோட்டத்தைச் சேர்ந்த திருமணமான 32 வயதான குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி, தாத்தா அம்மாயின் பாதுகாப்பிலேயே இருந்துள்ளார்.

எனினும், அச்சிறுமி, குறித்த குடும்பஸ்தரின் வீட்டுக்கு, தனது தாத்தா அம்மாயிக்கு தெரியாமல் அவ்வப்போது சென்று வந்துள்ளார்.

இதனை தொடர்ந்து அவதானித்து வேலையில், குறித்த சிறுமி இடையே இடையே, சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று வந்துள்ளார்.

இது தொடர்பில், அயலவர்கள், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அந்த தோட்டத்துக்கு விரைந்து, குடும்பஸ்தரைக் கைது செய்த பொலிஸார், சிறுமியை டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சந்தேக நபர் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பட்ட போது எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## ரயிலில் மோதிவர் படுகாயம்

**எச்.எம்.எம்.பர்ஸான்பு**

ஓட்டமாவடி பகுதியில் புதன்கிழமை (22) காலை புகையிரத வண்டியில் மோதி நபரொருவர் காயமடைந்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த புகையிரதம் ஓட்டமாவடி பகுதியால் செல்லும் போது நபரொருவர் புகையிரத பாதையைக் கடக்கும் போது, இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதில், காயமடைந்தவர் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த மௌலவி ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## கம்பஹா மாநகர சபை

**2025 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 2025 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை, வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம் ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.**

2025 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியில் இருந்து 2025 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் வாகனங்கள் நிறுத்தும் இடம், இறைச்சிக்கடை, பொது மலசலக்கூடம் ஆகியவற்றுக்காக வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுகோரல் விண்ணப்பம் அதற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2025.02.06 ஆம் திகதி வரையிலும் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையிலும் விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு விண்ணப்பப்படிவங்கள் அசல் மற்றும் நகல் என தனித்தனி கடித உறைகளில் இட்டு சீல் வைக்கப்பட்டு இரண்டு உறைகளையும் ஒரே உறையில் இட்டு பிறகு அவற்றையும் சீல் வைக்கப்பட்ட பிறகு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சபையின் விலைமனுக்கோரல் விண்ணப்பம் –2025”** என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2025.02.07 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு மாநகர ஆணையாளர், கம்பஹா மகாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட முடியும்.

சீல் வைக்கப்பட்ட டெண்டர் படிவங்களை ஏற்றுக்கொள்வது 2025.09.25 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முடிவடையும் மற்றும் முடிவடைந்தவுடன் உடனடியாக டெண்டர்கள் திறக்கப்படும். ஒப்பந்ததாரர் அல்லது அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்தல் அனுப்பப்பட்ட 07 நாட்களுக்குள், 04 மாதங்களுக்கான டெண்டர் வாடகைத் தொகையுடன் அதற்கான உரிய முத்திரை வரி கட்டணத்துடன் அனைத்தையும் ஒரே நேரத்தில் வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். 04 மாத டெண்டர் வைப்புத்தொகையை ஒரே நேரத்தில் செலுத்தத் தவறிய டெண்டர்தாரர்களுக்கு டெண்டர்கள் வழங்கப்பட மாட்டாது. மேலதிக தகவலுக்கு, 033-4942296 அல்லது 033-4942297 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| இல | இடம் தொடர்பிலான விவரம் | விலைமனுகோரல் விண்ணப்பக் கட்டணம | விலைமனு வைப்பீட்டு பணம் (மீளக் கையளிக்கப்படும்) | வருடாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| | **இறைச்சிக்கடை** | | | |
| 1 | ஆட்டிறைச்சி கடை - யக்கல யக்கல புதிய வர்த்தக கட்டிடத் தொகுதி | 1,000.00 | 1,450.00 | 74,250.00 |
| | **பொது மலசலகூடம்** | | | |
| 2 | வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 1,800.00 | 90,000.00 |
| 3 | ஜா-ஹெல வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 5,418.00 | 270,900.00 |
| | **வாகனங்கள் நிறுத்தும் இடம** | | | |
| 4 | வைத்தியசாலைக்கு அண்மையில் வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 48,780.00 | 2,439,000.00 |
| 5 | கம்பஹா - கொழும்பு பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 14,994.00 | 749,700.00 |
| 6 | ஜா-எல, கம்பஹா பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 9,180.00 | 459,000.00 |
| 7 | ஜா-ஹெல பழைய பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 5,400.00 | 270,000.00 |

நீங்கள் சமர்ப்பிக்கும் டெண்டர் தொகைக்கு முத்திரை வரி கட்டணம் வசூலிக்கப்படும். சம்பந்தப்பட்ட வளாகத்திற்கு தண்ணீர்/மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருந்தால், டெண்டர்தாரர்கள் மூலம் முழு கட்டணத்தையும் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**2025.01.21**

**லோச்சனா பாலசூரியா**
**நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரங்கள், செயல்பாடுகள்,**
**நிர்வாக அதிகாரி,**
**மாநகர சபை,**
**கம்பஹா**

# அரசாங்கம் முன்வைத்திருக்கும் காலை பின்வைக்கவே கூடாது

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்தும் அரசுக்கு சொந்தமான வாசஸ்தலங்கள் மற்றும் அதற்கான வாடகை கட்டணங்கள் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தெளிவுபடுத்தியிருக்கும் கருத்துகள், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவிப்புகள் தற்போது பேசும் பொருளாக இருக்கின்றது.

இலங்கையில் தேவையற்ற செலவினங்களைக் குறைக்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் கடுமையான கொள்கையைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது, அதற்கு முன்மாதிரியாகத் தான், எந்தவொரு வாசஸ்தலத்தையும் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மாதம் 2 மில்லியன் பெறுமதியான அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு வீட்டில் வசிப்பதாகவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மாதாந்தம் ரூ.0.9 மில்லியன் பெறுமதியான வீட்டில் இருப்பதாகக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டின் பெறுமதி மாதத்திற்கு ரூ.4.6 மில்லியன் எனவும் மற்றும் ஒரு ஏக்கருக்கும் அதிகமான இடம் எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க வீடொன்றை ஏற்றுக்கொள்ளாததற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி திசாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான் பயன்படுத்திய அரச இல்லத்தை அண்மையில் கையளித்ததையும் முன்னாள் முதல் பெண்மணி ஹேமா பிரேமதாசவும் சில காலங்களுக்கு முன்னர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை கையளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தான் பயணிக்கும் போது பரிவாரங்களையும் பெரிதும் மட்டுப்படுத்தியுள்ளார். அவர் ஒரு பயணம் செல்லும்போது, பின்னால் எந்த அம்பியூலன்ஸ் வாகனமும் வருவதில்லை. வழக்கமாக, இந்த நாட்டின் வழக்கப்படி, ஒரு ஜனாதிபதி எங்காவது செல்லும்போது, அங்கு ஒரு தீயணைப்பு வண்டி கூட அனுப்பப்படும். ஆனால் அனுரகுமார திசாநாயக்கவின் எளிய வழிமுறையில் அப்படி எதுவும் இல்லை. இந்நிலையில், எம்.பிக்களின் ஓய்வூதியமும் விரைவில் நிறுத்தி வைக்கப்படும் என்று தெரிகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதியொருவர் ஓய்வூதியம் மற்றும் ஏனைய சலுகைகளை ஏன்? பெறவேண்டும் என்பதைப் பற்றி பொதுவெளியில் கலந்துரையாடப்படுகின்றது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்த அதிரடியான அறிவிப்புகள், மக்கள் சிந்திக்க வைத்துள்ளது. ஆக, நாட்டை கட்டியெழுப்புவதற்கான தலைமைத்தாங்கிக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற வைபவத்தை மிக,மிக எளிமையாக நடத்தியிருந்தார்.

அவரின் கீழிருக்கும் அமைச்சர்கள், கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டபோது, எவ்விதமான கொண்டாட்டங்களும் இடம்பெறவில்லை. எளிமையாகவே பதவியேற்றனர். அமைச்சர்கள் பயணிக்கின்றார்களா என்பது கூட மக்களுக்குத் தெரியாது. வீதிகள் மூடப்படுவதில்லை. பரிவாரங்களும் இல்லை. இவ்வாறான செயற்பாடுகள் தொடர வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளிவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு என சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# கலாசார சீரழிவுக்குள் தமிழ் தேசம்

முருகானந்தம் தவம்

வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக மிக வேகமாகபரவி வரும் போதைப்பொருள் பாவனைகள், தீவிரமாகத் தலையெடுத்துள்ள வன்முறைகள், குழு மோதல்கள், கலாசார சீரழிவுகள், ரவுடித்தனங்கள், சினிமா மோகங்கள் தமிழ்த் தேசத்தின் இளைய தலைமுறையினரை மிகவும் தவறான பாதைக்கு மிக வேகமாகக் கொண்டு சென்றுகொண்டிருப்பதனை வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

நெஞ்சில் விடுதலை வேட்கையும் கழுத்தில் சயனைட் குப்பியும் கைகளில் ரி56 துப்பாக்கிகளுமென தமிழினத்தின் உரிமைகளுக்காகக் களமாடி தமது இன்னுயிர்களைத் தமிழின விடுதலைக்கான வித்துக்களாக்கிய தமிழ் இளைஞர், யுவதிகள், மக்கள் வாழ்ந்த மண்ணில் இன்றைய இளைஞர்களினால் அரங்கேறும் அவலங்களும் அசிங்கங்களும் அட்டகாசங்களும் அராஜகங்களும் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றன.

வடக்கில் உள்ள இன்றைய இளைஞர்களின் நெஞ்சில் போதை, வன்முறை வெறியும், கழுத்தில் தங்க வெள்ளிச் சங்கிலிகளும், கைகளில் மதுபானப் போத்தல்களும், சிகரெட்களும், போதைப்பொருட்களும், வாள்களும், வெட்டுக்கத்திகளும் என வீதிக்கு வீதி, ஊருக்கு ஊர், நகருக்கு நகர் விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள்களிலும் ஆட்டோக்களிலும் கார்களிலும் வான்களிலும் சென்று தமிழினத்தின் சீரழிவுகளாக அரங்கேற்றும் அட்டகாசங்களினால் முழுத் தமிழினமும் வெட்கித் தலைகுனியும் நிலைமையே இன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான தறி கெட்டுப்போன தலைமுறையினால் வடக்கில் தினமும் நடக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியையும் கவலைகளையும் ஏற்படுத்தி வருகின்றன. கடந்த புதுவருட தினத்தன்று நள்ளிரவு போதை தலைக்கேறிய நிலையில் யாழ். நகரப் பகுதியின் பிரதான வீதியில் இளைஞர் குழுவொன்று சிங்களப் பாடல்களை பெரும் சத்தத்தில் ஒலிக்கவிட்டு ஆட்டோக்களில் நடத்திய வெறியாட்டமும் நியாயம் கேட்ட இரு இளைஞர்கள் மீது நடத்திய கொலை வெறித் தாக்குதலும் காணொளிகளாக வெளிவந்து பார்ப்போரை குலைநடுங்க வைத்தது.

மது, போதைப்பொருள் பாவனைகளினால் மட்டும் இளைஞர் குழுக்கள் இவ்வாறு தறிகெட்டுச் செல்லவில்லை. கூலிக்குக் கொலை செய்தல், கூலிக்கு தாக்குதல், கடத்தல், அச்சுறுத்தல் என பணம் உழைக்கும் தொழிலாகவும் வன்முறைகளை இவர்கள் கையில் எடுத்துள்ளனர். இவ்வாறானவர்களை வெளிநாடுகளில் உள்ள சில புலம்பெயர் தமிழர்களே தமது தேவைகளை நிறைவேற்றவும் தமது எதிரிகளைப் பழிவாங்கவும், பணம் கொடுத்துப் பயன்படுத்துகின்றனர் என்பதுதான் கொடுமையானது. இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டுப் பிடிபட்ட சிலர் வழங்கிய வாக்கு மூலங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

தமிழர் தாயகத்தில் தறிகெட்ட தலைமுறையை உருவாக்குவதில் பொலிஸாரும் அரச புலனாய்வுப் பிரிவினரும் வெளிநாடுகளில் புலம்பெயர் வாழ் சில தமிழர்களும் பெரும் பங்கு வகிக்கின்றனர்.எதிர்காலத் தலைமுறைத் தமிழர்களிடம் தமிழன் என்ற உணர்வோ தமிழீழ விடுதலை வேட்கையோ ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக்கவனமாக இருக்கும் அரச புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறான தறிகெட்ட தலைமுறையைத் திட்டமிட்டு உருவாக்குகின்றனர். இதற்கான அவர்களின் பிரதானமான ஆயுதமாக இருப்பது போதைப்பொருட்கள். வடக்கில் இன்று போதைப்பொருட்கள் தாராளமாகப் புழக்கத்தில் இருப்பதற்கு இந்த அரசு புலனாய்வுத்துறை பெரும் பங்கு வகிக்கின்றது.

அரச புலனாய்வுத்துறை திட்டமிட்டு உருவாக்கும் இந்த தறி கெட்ட தலைமுறை செய்யும் அட்டகாசங்கள், அராஜகங்களை குற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டும் அழுத்தங்களினால் கைது செய்தாலும் சாதாரண சட்டங்களின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்து ஒரு சில நாட்களிலேயே இவ்வாறானவர்களை வெளியில் விடும் வேலையை பொலிஸ் தரப்பினர் செய்து வன்முறைகளும் குற்றங்களும் கலாசார சீரழிவுகளும் தமிழர் பிரதேசங்களில் அதிகரிப்பதனை ஊக்குவிக்கின்றனர். சில பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு இவ்வாறான குழுக்கள் பிறந்தநாள் கொண்டாட்டங்களை வெகு விமரிசையாகச் செய்யுமளவுக்கு இரு தரப்பினருக்குமான உறவுகள் உள்ளன.

இதற்கு உதாரணமாக பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் பிரசார குழு மீது நீர்வேலி கரந்தன் பகுதியில் வைத்து கூலிப்படைகளினால் நடத்தப்பட்ட தாக்குதலைக் கூற முடியும். இத்தாக்குதலில் பெண்கள் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என பெயர் விபரங்களுடன் பொலிஸாருக்கு கட்சியினர் முறையிட்டபோதும் தாக்குதல் நடத்திய எவரும் கைது செய்யப்படவில்லை.

தாக்கியவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு வலுப்பெற்ற நிலையில், தாக்கியவர்களைக் கைது செய்யாத பொலிஸார் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலையில் வைத்து கை விலங்கிட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரிடம் தமிழ் மக்கள் கூட்டணியினர் கேட்டபோது, தமக்கு மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுக்கு அமையவே கைவிலங்கிட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு, தாக்குதல் சம்பவத்துடன், தொடர்புபட்டவர்கள் பிறந்தநாள் விருந்து நடத்திக் கொண்டாடியதாகவும் தகவல்கள் வெளிவந்திருந்தன. இதுபோன்ற உறவுகளே பொலிஸாருக்கும் தறிகெட்டுப்போயுள்ள தமிழ் தலைமுறைகளுக்குமுள்ளன.

அதேவேளை, வெளிநாடுகளிலுள்ள தமிழர்களும் இவ்வாறு எதிர்காலத் தலைமுறை தறிக்கொட்டு போவதற்கு தெரிந்தோ தெரியாமலோ உறவுகள், சொந்தம், பாசம் என்ற அடிப்படையில் செய்யும்பண உதவிகளும் காரணமாகின்றன. வெளிநாடுகளுக்கு சென்று தம்மை வருத்தி ஊண், உறக்கமின்றி இரவு பகல் பாராது, உழைக்கும் உறவுகள் ஊரிலுள்ள தமது பிள்ளைகள், சகோதரர்கள், சொந்தங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக பண உதவிகளை செய்து வருகின்றனர். இவ்வாறான பணத்தை வைத்துக்கொண்டு உழைக்காமல் ஊதாரித்தனம் செய்யும் இளைஞர்கள் எண்ணிக்கையும் வடக்கில் பெருமளவில் அதிகரித்து வருகின்றது.

எந்தவித வேலை வெட்டியும் இருக்காது. ஆனால், பல இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார்சைக்கிள்கள், செல்போன்களுடன் வீதிக்கு வீதி, சந்திக்கு சந்தி தாடிகளுடனும் சடாமுடிகளுடனும் நிற்கும் இளைஞர்களை இன்று பல இடங்களிலும் காண முடிகின்றது. தாம் வைத்திருக்கும் மோட்டார்சைக்கிளுக்கு பெற்றோல் அடிப்பதற்கோ வைத்திருக்கும் செல்போனுக்கு ரீலோட் செய்வதற்கோ அவர்களின் உழைப்பிலான பணம் இருக்காது. அந்த மோட்டார் சைக்கிள், செல்போன் வெளிநாடுகளிலுள்ள உறவுகள் வாங்கிக் கொடுத்ததாகவே இருக்கும். காலையில் எழுந்தவுடன் சந்திக்குச் சந்தி வெட்டியாக நிற்பது மாலையானதும் தண்ணிப்பார்ட்டி வைப்பதும் தான் அவர்களின் முழுத் தொழிலாகவுள்ளது. இவ்வாறானவர்களை நம்பியே வடக்கில் மதுபானசாலைகளும் பெரும் எண்ணிக்கையில் திறக்கப்பட்டு வருகின்றன.

கலாசார சீரழிவுக்கு சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரில் நடந்த ஒரு புரியாணிக்கடை திறப்பு விழாவில் நடந்த நிகழ்வுகளைக் கூறமுடியும். இத்திறப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக இந்தியாவில் தமிழகத்தில் பிரபல யூடியூப்பராக உள்ள இர்பான் என்பவர் அழைக்கப்பட்டிருந்தார். அவரைக்காண அங்குக் குவிந்திருந்த மக்கள் கூட்டமும் அரைக் காற்சட்டையுடன் வந்த அவரை தொட்டுத் தடவிப்பார்த்துப் புளகாங்கிதமடைந்த சில யுவதிகளையும் செல்பி எடுக்க முண்டியடித்த இளைஞர், யுவதிகளையும் காணமுடிந்தது.

இந்த யூடியூப்பர் ஒரு முன்னுதாரணமிக்கவரோ, போற்றிப் புகழக்கூடியவரோ, சமூகத்திற்கு ஏதாவது செய்தவரோ அல்லது ஈழத் தமிழினத்தின் போராட்டம், வலிகள் தொடர்பில் ஏதாவது அறிந்தவரோ கிடையாது. ஹோட்டல்களுக்கு சென்று இலவசமாகச் சாப்பிட்டு விட்டு அந்த உணவுகள் தொடர்பில் தனது யூடியூப்பில் விமர்சனம் செய்பவர். பணம் கொடுத்தால் எந்த உதவாத உணவையும் உயர்த்தி புகழக்கூடியவர். அதுமட்டுமன்றி, தமிழகத்தில் பல வழக்குகளை எதிர்கொண்டுள்ளவர். பொலிஸாரால் தேடப்பட்டவர். மனைவியின் பிரசவத்தை வைத்தே யூடியூப்பில் பணம் சம்பாதித்தவர். இவரைக் காணத்தான், இவருடன் செல்பி எடுக்கத்தான் யாழ். நகரில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பலமணி நேரம் காத்திருந்து தொட்டுத்தடவி செல்பி எடுத்து மகிழ்ந்துள்ளனர்.

இவ்வாறு தறிகெட்டுப்போகும் தமிழ் தலைமுறையினால் தமிழ்த் தேசமும் தமிழினமும் மீள முடியாத அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கொண்டிருக்கின்றது. விடுதலைப் போராட்டத்தின் மூலம் முழு உலகையுமே தமது பக்கம் திரும்பிப்பார்க்க வைத்த தமிழ்த் தேசம் இன்று கலாசார சீரழிவுக்குள் மூழ்கடிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

## கடிதங்கள்

### வெட்டிய மரங்கள் வீணாக போகின்றன



ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா ப்ரௌன்லோ தோட்டத்தில் தோட்ட முகாமையாளர் பங்களா, தொழிலாளர் குடியிருப்பு இருக்கும் பகுதிகளில் இருந்த ஆபத்தான ஆனால், பெறுமதி வாய்ந்த மரங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் அறுக்கப்பட்டன.

இவ்வாறு அறுக்கப்பட்ட மரங்கள் மிகவும் பெறுமதி மிக்க கருப்பந்தையிலம் (டேப்பன் டைன்) மரங்கள் ஆகும்.

தோட்ட நிர்வாகம் அந்த வெட்டிய மரங்களைப் பலகைக்காக விற்பனை செய்து இருக்கலாம் அல்லது தொழிலாளர்களுக்கு விறகுக்காக வழங்கி இருக்கலாம். அதை விடுத்து, வெட்டிய இடத்தில் போடப்பட்டுள்ளதால் சில காலங்களில் அந்த வெட்டிய மரங்கள் உக்கி போகும் நிலை தோன்றியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தோட்ட நிர்வாகம் உடன் கவனம் செலுத்தி அவற்றை மரக் கூட்டுதாபனத்துக்கு விற்பனை செய்ய வேண்டும் என அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்

# தொலைக்காட்சிகளில் சிறுவர் உளவியல்



நாகராசா தனுஸ்காந்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் நவீன கண்டுபிடிப்புகள் பெருகி உள்ளன. வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற வெகுசன தொடர்பு சாதனங்கள் இன்றைய மனித வாழ்வில் பெரும் செல்வாக்கு பெற்றுள்ளது. இவை பல்வேறு வசதிகளைக்கொண்டு காணப்படுகின்றன. இன்றைய சூழலில் தகவல் தொடர்புச் சாதனங்கள் இல்லாத உலகை நம்மால் கற்பனை செய்து பார்ப்பது கூட இயலாததாகி விட்டது. அதேவேளை, இது பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும்.

அந்தவகையில், ஜனரஞ்சக ஊடகமாக விளங்கும் தொலைக்காட்சி மனிதர்களின்அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக மாறிவிட்டது. குரல், தரவுகள் மற்றும் காட்சி ஆகிய மூன்று தொடர்பாடல் முறைமைகளைக்கொண்டு கட்புல செவிப்புல தொடர்பு சாதனமாக செயல்பட்டு சமூகத்தில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துவது தொலைக்காட்சியாகும்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் புதுப்புது உபகரணங்கள் வருகை தந்தாலும், தொலைக்காட்சிக்கென தனியான இடம் தொடர்ச்சியாகத் தக்கவைக்கப்பட்டே உள்ளன.

குறிப்பாக 1970களிற்கு பின்பே வளர்முக நாடுகளில் தொலைக்காட்சியின் வருகையும் தொடர்ச்சியான அதன் வளர்ச்சியையும் காணமுடிகின்றது.

அந்தவகையில், இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் தொலைக்காட்சி நம் அன்றாட தேவைகளுள் ஒன்றாகும். இன்று தொலைக்காட்சிகள் இல்லாத வீடுகளே இல்லை என கூறலாம்.

சிறுவர்களைப் பொறுத்தவரையில், தற்காலத்தில் அதிகம் பயன்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். தொலைக்காட்சி கட்புல மற்றும் செவிப்புலன் மிக்க சாதனம் என்பதால் சிறுவர்களை உடனடித் தாக்கத்திற்கு அல்லது பழக்கத்திற்கு உட்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சிறுவர்கள் நாளொன்றுக்குச் சராசரியாக (3-4) மணித்தியாலங்கள் தொலைக்காட்சி பார்க்கச் செலவிடுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இத்தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் பார்வையாளர்களுக்குப் பல நன்மைகளை வழங்கும். அதேவேளை, காலமாற்றம் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பல தீமைகளும் இல்லாமல் இல்லை. இந்த விளைவுகளின் தாக்கம் நீண்டகால மற்றும் ஆழமான தாக்கத்தினையும் செலுத்தி நிற்கின்றன.

சமூகத்தில் இத்தகைய தாக்கம் சிறுவர்களின் நடத்தை மற்றும் மாற்றங்களிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றன.

மேலும், இத்தகைய செல்வாக்கு சிறுவர்களினை பார்வையாளர்கள் என்ற நிலையினைத் தாண்டி, தற்காலத்தில் பங்காற்றுபவர்களாகச் சிறுவர்களை சித்திரிப்பாளர்களாக வெளிப்படுத்தி, தமது நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதன் மூலமும் ஏற்படுத்தப்படுகின்றன. அத்தகைய நடத்தை மாற்றங்கள் அவர்களின் தனிப்பட்ட திறன்களை வெளிப்படுத்தத் துணைபுரிகிறது.

அத்தோடு, சமூகப்பிறழ்வு, அதிகரிக்கத் துஷ்பிரயோகம் கல்வித்தரம், நேரகாலம் வீணாதல், உறவுகளின் தொடர்பு அற்றுப்போதல் என்ற பண்புகளை உடையவர்களாகத் தொலைக்காட்சியின் மாய விம்பம், நிஜம் போன்ற தோற்றத்தை ஆழமாக ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

எனவே, சிறுவர் சமூகத்தின் பல்வேறு நடத்தை மாற்றங்களை பல்வேறு நன்மை தீமை சார்ந்த சமூக பரவல்களை ஏற்படுத்தத் தொலைக்காட்சி பங்களிப்பு எத்தகையது என்பதைக் கீழ்வருவன மூலம் அறிந்து கொள்ளலாம்.

### சிறுவர் தொலைக்காட்சி

இன்றைய சிறுவர்களே நாளைய உலகின் நல்வழிகாட்டிகளாக விளங்க வேண்டியவர்கள். அறிவும், ஒழுக்கமும், பண்பாடும் நிறைந்த நல்ல தலைவர்களாக மிளிர வேண்டியவர்கள். அந்தவகையில், நாளைய சமுதாயத்திற்குப் பயன்படும் நல்ல பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு இன்றைய சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

இத்தகைய பொறுப்பை நிறைவேற்றுபவர்களாகப் பெற்றோரும் உறவினர்களும் ஆசிரியர்களும் நண்பர்களும் பெரியவர்களும் காணப்படுகின்றன.

அத்தோடு, இப்பொறுப்பை நிறைவேற்றும் மற்றும் ஒரு வழிகாட்டியாக வெகுசன ஊடகமான தொலைக்காட்சி விளங்குகின்றது.

இன்று பெரும்பாலான வீடுகளில் தொலைக்காட்சி இருக்கின்றது சில வீடுகளில் கணினியும் இருக்கின்றது சிறுவர்கள் இயல்பாகவே தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்கள் பார்ப்பதிலும் 'டிவி கேம்ஸ்' விளையாடுவதிலும் விருப்பமுடையவர்களாக



உள்ளனர். இதனைக் காரணமாகக்கொண்டு சிறுவர்களுக்கென பிரத்தியேக தொலைக்காட்சி நிறுவனங்கள் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றன.

ஆசிரியரைக் கொண்டு பாடங்களை விளக்குதல், மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிக்கும் வகையிலான நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள், வினாடி வினா நிகழ்ச்சிகள், விவாத அரங்குகள் என பல நல்ல பயனுள்ள நிகழ்ச்சிகள் இச்சிறுவர் தொலைக்காட்சி வாயிலாக வழங்கப்படுகின்றன. இவற்றின் மூலம் சிறுவர்கள் எளிதில் கற்றுக்கொள்ள உதவும் நல்ல பொழுதுபோக்கு சாதனமாகவும் தொலைக்காட்சி விளங்குகின்றது.

### தொலைக்காட்சியால் சிறார்களுக்கு என்ன நன்மை

தொலைக்காட்சிகள் என்பது சிறுவர்களை சுற்றி உள்ள உலகத்தைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

கல்வி சார் துறைக்கு ஊடகங்கள் ஆற்றி வரும் பங்களிப்பு காரணமாக இன்று மாணவர்கள் மத்தியில் ஊடகங்கள் உன்னத இடம் பிடித்து வருவதைக் காணமுடிகிறது.

அதாவது சிறுவர்கள் தனது தகவல்களை அறிந்து கொள்கின்றனர், உலகில் என்ன நடக்கின்றது என்பதை புரிந்து கொள்கின்றனர், கல்வி அறிவு, சமையல் அறிவு, புதிய விடயங்களை கற்றுக் கொள்ளுதல், மகிழ்ச்சிகரமாக பொழுதுபோக்குகளை கழித்தல், விளையாட்டு நிகழ்வுகளை கண்டு கழித்தல், சொந்த நாட்டிலும் சரி உலகிலும் சரி நடக்கக்கூடிய செய்திகளை அறிந்து கொள்ளுதல், மற்றும் உலகில் தற்கால நிலைமை தொடர்பாக அறிந்து கொள்ளுதல், அரசியல் சூழ்நிலைகள் பற்றி தெரிந்து கொள்ளுதல், யோகா, உடல் ஆரோக்கியம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான உதவி குறிப்புகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வைத்திய ஆலோசனைகளை பெறுதல்

போன்ற எல்லா வயது பிரிவினர்களும் பல்வேறு நன்மைகளையும் விழிப்புணர்வுகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஓர் தளமாகவே இந்த தொலைக்காட்சி காணப்படுகின்றது.

அத்துடன், தொலைக்காட்சியை பார்ப்பதன் மூலம் சிறுவர்களின் மன அழுத்தத்தைப் போக்கி மன மகிழ்வு ஏற்படும்.
காலம் பொன்னானது என்பற்கேற்ப தொலைக்காட்சி பார்ப்பதை ஒரு நல்ல பொழுது போக்காகவும் கொள்ளலாம்.

### தொலைக்காட்சியால் சிறார்களுக்கு என்ன தீமை

வெகுசன தொடர்பு சாதனங்களில் ஒன்றான தொலைக்காட்சியினால் எப்படி நன்மைகள் கிடைக்கின்றதோ அவ்வாறே தீமைகளும் அதிகமாகவே வந்தடைகின்றன. அதாவது அதிகமாக தொலைக்காட்சியிலே மூழ்கி இருப்பதனால் சிறுவர்களின் நேரம் வீணடிக்கப்படுவதோடு, உடல் நலமும், மன நலமும் பாதிக்கப்படுகின்றன.

மேலும் வன்முறை காட்சிகளை சிறுவர்களுக்கு பார்ப்பதனால் அவர்களுக்குள் வன்முறை உணர்வு தூண்டப்படுகின்றன.

அத்துடன், போதைப்பொருளுக்கு அடிமையாகுதல், போதைப்பொருள் பாவனை, எதிர்மறையான எண்ணங்கள், சமூகத்திலிருந்து விலகி நடத்தல் மேலும் பாலியல் ரீதியான காட்சிகள் ஒளிபரப்பப்படுவதனாலும் சிறுவர்களின் உள்ளம் பாதிக்கப்படுவதனை காணலாம்.

அத்துடன், சிறுவர்கள் தொலைக்காட்சியில் கார்ட்டூன் பார்த்து அதேபோலவே தனது செயலை செய்வதற்கும் எத்தனிப்பார்கள், அதனை எத்தனிப்பார்கள். அவ்வாறு சிவர்கள் பார்த்து ரசிக்கும் கார்ட்டூன்கள் என்ன வகையாக இருக்கிறது என்பதை பெற்றோர் கண்காணிக்க வேண்டும். இதன்மூலம் சிவர்கள் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்களுடன் நேரத்தை செலவழிக்கவும் இது உதவியாக இருக்கும். சராசரியாக, ஒரு நாளில் 45 நிமிடங்கள் கார்ட்டூன்கள் பார்க்க அனுமதிக்கலாம். நேரம் காலம் அறியாமல், மணிக்கணக்காக கார்ட்டூன்கள் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். கார்ட்டூன்கள் நிச்சயமாக குழந்தைகளிடம் உளவியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

### சிறுவர்களின் நடத்தைகள்

சிறுவர்களின் நடத்தைகள் பற்றி நோக்குமிடத்து, சுமார் மூன்று வயது வரை பிள்ளைகள் புலன் இயக்க விளையாட்டுகளைப் பெரிதும் விரும்புகின்றனர். இப்பருவத்தில் தவழுதல், சிறு பொருட்களைக் கையாளல், பற்றுதல், பொருட்களை ஒன்றோடு ஒன்றிணைத்தல், விளையாட்டு கட்டிடங்களை அடுக்குகள், அவ்வாறு அடுக்கி வைத்ததை கீழே தள்ளுதல் ஆகிய விளையாட்டுகள் மூலம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர். குழந்தைகள் இப்பருவத்தில் தனித்தே விளையாடுவர்.

இக்காலத்திலேயே பாதுகாப்பான குடும்ப வட்டத்தை விட்டு வெளியே உலகத்தில் சந்திக்க முற்படுகின்றனர். எனவே, முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகள் நல்ல நடத்தைகளைக் கைக்கொள்ளும் வகையில் பிள்ளைகளின் செயல்பாடுகளில் அக்கறை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

### சிறுவர்கள் சோம்பேறியாக்குகிறது

சிறுவர்கள் வெளியில் சென்று விளையாடுவதை விட்டுவிட்டு, அவர்களது விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சியையோ, வேறு ஏதேனும் நிகழ்ச்சியையோ பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் அவர்களது உடல் சுறுசுறுப்பை இழந்துவிடுகிறது. அவர்களது அன்றாடப் பணிகளைக் கூடச் செய்யாமல் டிவி முன்பு அமர்ந்து பெற்றோரிடம் திட்டு வாங்காத குழந்தைகளே இல்லை என்று கூறலாம்.

### ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் தொலைக்காட்சி விளம்பரங்கள்

உடலுக்கு கேடு விளைவிக்கும் குளிர்பானங்களும், நொறுக்குத் தீனி நிறுவனங்களும் கொடுக்கும் விளம்பரத்தைப் பார்த்து அவற்றை உட்கொள்ள விரும்புகின்றனர் விரும்புகின்றனர். இதனால் அவர்களது உடல்நிலை கெடுகிறது.

ஒரே இடத்தில் உட்கார்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே நொறுக்குத் தீனியை உண்பதால் உடல் பருமன், விளம்பரத்தைப் பார்த்து கண்டதையும் சாப்பிடுவதால் சத்துணவு பற்றாக்குறை, தொலைக்காட்சியை மிக அருகில் பார்ப்பதால் கண் பார்வை குறைபாடு, எந்த சிந்தனையும் இன்றி தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டே இருந்தால் மூளை வளர்ச்சி குறைவது, ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது அதை கவனிக்க இயலாமை, பேய், பாம்பு படங்களைப் பார்ப்பதால் அதன் மீதான பயம், இறவில் மிகக் கொடூரமான படங்களைப் பார்ப்பதால் தூக்கம் இழந்து தவித்தல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகிறது.

### பொழுதுபோக்கு சாதனமாக மட்டும் இருக்கட்டும்

சில நேரத்தை மட்டும் ஒதுக்கி தொலைக்காட்சியைப் பார்க்க அனுமதிப்பதுதான் சிறந்த வழி. சிறுவர்கள் பாடசாலையில் இருந்து வந்து, வெளியில் சென்று விளையாடி பின்னர், வீட்டுப் பாடங்களை முடித்து ஒரு சில மணி நேரம் தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்கலாம். அதுவும் நல்ல நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து பார்க்க வைக்கலாம். நாம் சொல்வதை எந்த பிள்ளை கேட்கிறது என்று பெற்றோர் கூறுவார்கள். ஆனால் அதற்கு நாம்தான் வழிகாண வேண்டும். பாடசாலையில் இருந்து வரும் பிள்ளையுடன் பெற்றோர் கொஞ்ச நேரம் விளையாடச் செல்ல வேண்டும் அல்லது அவர்களது நண்பர்களுடன் விளையாட அனுமதிக்க வேண்டும்.

வீட்டுப் பாடங்களை எழுத நேரம் கொடுத்து விட்டு பிறகு தொலைக்காட்சியின் முன்பு அமரலாம். அவர்களை தொலைக்காட்சி பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டு எப்போதும் நீங்கள் டிவி முன்பு அமர்ந்திருந்தால், அவர்களது கேள்விக் கணைகளுக்கு ஆளாக நேரிடும். எனவே, றுவர்களுக்காக நீங்களும் சிலவற்றை தியாகம் செய்து தான் ஆக வேண்டும். அவர்களுக்கு பயனுள்ள அல்லது நகைச்சுவை நிகழ்ச்சிகளை பார்க்க அனுமதியுங்கள். நீங்களும் அவற்றையே பாருங்கள். தொலைக்காட்சி தொடர்களில் உங்கள் நேரத்தை சாகடிக்காமல், அவர்களுடன் உரையாடுங்கள். பள்ளியில் நடந்தவற்றை பேசுங்கள். அவர்களது பழக்க வழக்கத்தை முறைப்படுத்துங்கள்.

இரவில் ஒன்றாக அமர்ந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நிச்சயமாக அப்போது தொலைக்காட்சி இயங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். அனைவரும், உணவையும், உறவையும் மட்டுமே நினைத்துக் கொண்டு சாப்பிடும் வகையிலான முறையை ஏற்படுத்துங்கள்.

சில விரும்பத்தகாத சேனல்களை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகாத வகையில் தடை செய்து விடுங்கள், தொலைக்காட்சியைப் பார்த்து பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான மறைமுகமான பதிலை கூறுங்கள். ஏன் அதையெல்லாம் கேட்கிறாய், அதைப் பற்றி பேசக் கூடாது என்று சொல்லாதீர்கள். உங்களிடம் கிடைக்காத பதிலை பிள்ளைகள் வெளியில் தேட ஆரம்பித்தால் பிரச்னைதான் ஏற்படும். எனவே, அவர்களது கேள்விக்கு நிறைவான பதிலை அது செக்ஸ் பற்றியதாக இருந்தாலும் சரி மறைமுகமாக கூறுங்கள்.

அவர்கள் விரும்பும் சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சரியானவை அல்ல என்று நீங்கள் நினைத்தால் அது பற்றி பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசி புரிய வையுங்கள். அதற்காக திட்டுவதால், அவர்களுக்கு உங்கள் மீது கோபம்தான் வருமேத் தவிர, அந்த நிகழ்ச்சி தவறானது என்ற எண்ணம் வராது.

எனவே, தொலைக்காட்சியை வீட்டின் ஒரு மூலையில் வையுங்கள். அது பொழுதுபோக்கு சாதனமாக மட்டும் இருக்கட்டும்.

# பாவத்தில் பாதி...





ரஜிதா அரிச்சந்திரன்

“என்ன பவானி ஏன் ஒருமாதிரி இருக்கிறீங்கள்? அப்பப்ப சொர்க்கம் போய் வாறீங்களே! என்ற கமலாவை ஏய் சும்மா கலாய்க்காதே பின்ன என்ன நாம இரண்டுபேரும் ஒரு அறையில இரண்டுவருடமாய் இருக்கிறம். நீ எப்பவுமே சோகமாயே இருக்கிறியே பவானி? ஒன்றையும் மறைக்காம சொல்லிடு நான் உன்னை கட்டாயப்படுத்துறன் என நீ நினைச்சாலும் பரவாயில்லை சொல்லிடு சொன்னா உன்ர பாரம் பாதி குறஞ்சிடும் என்ற கமலாவுக்கு பவானி

“என்ர கதை யை கேட்டு தேவையில்லாம நீ. கவலைப்பட போறாய் பார், அப்ப எனக்கு ஏழு வயதிருக்கும் எங்கட குடும்ப கஸ்ரம் தீரவேண்டும் எண்டு அப்பா வெளிநாட்டிற்கு சென்று விட நானும் தம்பியும் அம்மாவும் தனியாக நாலாபக்கமும் வயல்கள் சூழ கிடுகுகளால் ஆன ஒலைக்குடிசையில வாழ்ந்து வந்தோம். எங்கட வீட்டிற்கு அப்பாவின்ர ஒன்று விட்ட தம்பி அடிக்கடி வருவார், அவர் வரும் போதெல்லாம் எங்க மேல பாசத்தில எங்கள பார்க்க வாறார் என்று நினைத்திருந்த எங்களை ஏமாற்றி, எங்கட அம்மாவை கூட்டிப்போவரென்று நினைக்கவே இல்லை. திடீரென்று ஒருநாள் இரவாகியும் அம்மா வரவில்லை. தம்பியும் நானும் பள்ளிக்கூடம் போயிட்டு வந்தவடி சாப்பிடால் அழுது கொண்டு மயங்கி விட்டோம்.

விடிந்ததும் எழுந்து அம்மம்மா வீட்டுக்கு சென்று அம்மாவை காணோம் என்றதும் மாமாவும் அம்மம்மாவும் நீங்கள் இரண்டுபேரும் இங்கேயே இருங்கோ அம்மா இனி வரமாட்டா என சொன்னார். நாங்களும் ஒரு மாதமாய் அழுதோம் பிறகு அவவை. மறந்திட்டு பள்ளிக்கு சென்றோம்.

கொஞ்சநாள் கழித்து அப்பா வந்து தன்னுடன் எங்கள கூட்டிச் சென்றார் அன்று தொடக்கம் அப்பாவும் நாங்களும் சாப்பிட்ட பாதி சாப்பிடாத பாதியாகவே இருந்தோம்.

குடிக்கு அடிமையான அப்பா கெஞ்சம் கொஞ்சமாக தன்னையும் மறந்து எங்களையும் மறந்தார் அதன் விளைவால் அரைவயிறு சாப்பாடும் கிடைக்காமல் போச்சு. எச்கட நல்லகாலமோ கெட்டகாலமோ அப்பாவோட வெளி நாட்டில இருந்த நண்பர் வந்து அப்பாவை பேசி நீயும் நான் போகேக்க வந்திடவேணும் என்று அழைக்க என்ன நினைத்தாரோ தெரியவிலாலை வாறேன் என்று அவரோட வெளி நாடு செலால தயாரானார் அவர் வெளி நாடு செல்லும் போது எங்கள மாமி வீட்டில விட்டிட்டுப்போனார். அங்கிருந்து ஆரம்பித்தது எங்கட வாழ்க்கை சீரழிய அப்பா அனுப்புற காச எடுத்திட்டு எங்களுக்கு சாப்புட ஒழுங்கா தாறதில்லை மாமிட மகன் ஒரு போதவஸ்து அடிமை அவன் எங்கள அடித்து துன்புறுத்துவான் மாமி அத பார்த்து விளையாட்டுத்தானே என கூறி சிரிப்பா இந்த கொடுமை களிலிருந்து தப்பிக்க ஒரே வழி பள்ளிக்கூடம் என்றதாலையும் இந்த கஸ்ரங்களிலிருந்து படிப்பால விடுபடலாம் என்றதாலையும் பள்ளிக்கு சென்றோம்.

அங்கே என் நண்பி சுதாவுக்கு சொல்லி. அழவும் சுதா தன்ர அம்மாக்கு சொல்லி அப்பாவுக்கு தெரிவிக்க அப்பா வெளிநாட்டில இருந்து வந்து எங்கள தனிய கூட்டி சென்று வளர்த்தார்.

அதற்கு பிறகு ஓரளவு நிம்மதியாகத்தான் இருந்தது. அப்பா எங்களோட மனம்விட்டு கதைக்கவோ எங்கட தேவைகளை கேட்கவோ மாட்டார், எப்படியாவது முன்னேற வேண்டும் என்று படித்தோம்.

நேரவழிக்கு சாப்பாடு கிடைக்காமல் அலைந்து திரிந்த நாங்கள் வயலின் கதிர்களை பிடுங்கி சாப்பிட்டு காலத்தை கழித்த போதம் படிப்பை விடவே இல்லை.

தம்பியும் நானும் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாயிருந்தோம். எனக்கு பல்கலைக்கழகம் கிடைத்தது. படித்து முடித்தேன் தம்பி இப்ப டுப்யில நிக்கிறார்”

என்று சொல்லி முடியவும் கண்ணில் வழிந்த நீரை துடைத்துக்கொண்டு
“ஏன் பவானி அம்மா கதைக்க மாட்டாவோ? இப்ப கதைக்கிறவ, சில வேளைகளில சாப்பாடும் தருவா”

“உங்கள வேண்டாம் என்று விட்டிட்டு ஓடிப்போனவளிடம் எப்படி?”

“இஞ்சபார் அவை அவைக்கு இருக்கிற ஞாயங்களை அவை அவை ஞாயப்படுத்துவினம் எனக்கு என்னமோ அவவின்ர சூழ்நிலை என்ன மாதிரி இருந்திச்சு ஏன் அப்படி செய்தவ? எனாறு தெரியாததாலை நான் அவவ மன்னிச்சுட்டன். நான் யாரிடமும் வன்மம் வைக்க விலலை என்னமோ நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும் அதை கோழி குப்பை கிளறுவதைப்போல கிளறுகையில தான் பிரச்சினை உருவாகும் அப்படியே விட்டால் கரைச்சல் இல்லை ”

“அப்ப அவவுக்கு வேற குழந்தைகள் இருக்கா?”

“ஓ இரண்டு தம்பியும் தச்சி ஒருத்தியும் இருக்கிறினம் கமலா”

என்ன பவானி சொல்றாய்? அப்ப அவையோடயும் கதைப்பியா?”

“ஓம் அவை என்ன பாவம் செய்தவை எங்கள போல அவையும் பாவத்தில வந்த பாதிகள், சரி கமலா வா போய் சாப்பாடு வாங்கீட்டு வருவம்”

“கொஞ்சம் பொறு பவானி என்ர கேள்வியளை முழுசா கேக்கிறன். அப்பா இப்ப எச்க இருக்கிறார்?”

“அப்பா ஒன்றுவிட்ட அக்காவோட இருக்கிறார்”

“இவையோட கதைக்கிறதுக்கு ஒன்றும் சொல்லாரா?”

“பேசுவார், நான் அம்மா அப்பாவுக்குள்ளான பிரச்சினைக்குள்ள போக விரும்பல என்ல மனசுக்கு பிடித்தமாதிரி வாழுறன் விடு”

என கதைத்துக்கொண்டு இருவரும் கடைக்குவந்து “அண்ணா என்ன சாப்பாடு இருக்குது”

“பிள்ளையள் பிரியாணி நூடில்ஸ் மீன்கறி எல்லாம் இருக்கு எனான தர?”

“கமலா இண்டைக்கு சிக்கன் புரியாணி சாப்பிடுவமா?”

“சரி வாங்கிட்டுவா”

“அண்ணா ரண்டு பிரியாணி”

“கொஞ்சம் பொறுங்கோ போட்டுத்தாறன்”

“வாடி இருப்பம்”

என கமலா கூப்பிட இருவரும் உள்ளே போய் இருந்தார்கள். சாப்பாடு வந்ததும் இருவரும் சாப்பிட்டார்கள் சாப்பிடும் போது வாய் மட்டுமே அசைவதை காண முடிந்தது. அவாவளவு பசி அவர்களை பற்றிப்பீடித்திருந்தது. இருவரும் சாப்பாட்டிற்காக வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் அவர்களின் நிலை அவர்களுக்கு மட்டுமலல கருணை உள்ளம் கொண்ட முதலாளிக்கும் தெரியும் அதனால பார்த்துப்பாராமல் கவனிப்பார் இருவரும் நிரம்பிய வயிற்றுடனும் நிரம்பாத மனதுடனும் கதைபேசி நடந்தார்கள் அவர்கள் விட்ட மூச்சில காற்றே வறண்டுதான் போனது.

அமெரிக்கா

உக்ரைன் போர் விவகாரம்:

# புட்டினுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை எந்த நேரத்திலும் சந்திக்க தயாராக இருப்பதாக தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் பிரச்சினையில் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா வரவில்லை என்றால் ரஷ்யா மீது தடைகள் விதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.



புட்டினை சந்திப்பது குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்துத் தொடர்ந்து கூறிய அவர்,

“உங்களிடம் திறமை இருந்தால் போர் துவங்கி இருக்காது. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால், உக்ரைனில் போர் நடைபெற்றிருக்காது.

ரஷ்யா ஒருபோதும் உக்ரைனுக்குள் சென்றிருக்காது.

எனக்கு புட்டினுடன் நல்ல புரிதல் உள்ளது. அது நிச்சயம், நடந்திருக்காது. அவர் பைடனை அவமதித்தார். மிகவும் எளிமை. அவர் மக்களை அவமதிக்கிறார். அவர் புத்திசாலி. அவர் புரிந்து கொள்கிறார். அவர் பைடனை அவமதித்தார்.

அவர்கள் எப்போது நினைத்தாலும், நான் சந்திக்கிறேன். பல இலட்சம் மக்கள் கொல்லப்படுகின்றனர். இது மிகவும் கொடூரமான சூழ்நிலை, தற்போது அவர்கள் வீரர்கள். பொது மக்கள் அதிகளவில் கொல்லப்பட்டுள்ளனர், நகரங்கள் அழிக்கப்பட்டு இடிபாடு தளங்கள் போல காட்சியளிக்கின்றன” என்று கூறியுள்ளார்.

அமெரிக்கா

சீன பொருட்களுக்கு

## கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டம்

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றது முதல், அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

உலக சுகாதார அமைப்பில் இருந்து வெளியேறுதல், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுதல், அமெரிக்காவின் தென்பகுதி எல்லைகளில் அவசர நிலையை பிரகடனப்படுத்துதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இந்நிலையில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குக் கூடுதலாக 10 சதவீத வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

சீனா மீதான கூடுதல் வரிவிதிப்பு தொடர்பான அறிவிப்பை வரும் 1ஆம் திகதி ட்ரம்ப் வெளியிடுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

அதேபோல், மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குக் கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பும், எதிர்வரும் 1ஆம் திகதி வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

காசா

நிவாரண பொருட்கள் செல்வதில்

## எவ்வித பிரச்சினையும் இல்லை



“போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், காசாவுக்கு நிவாரண பொருட்கள் செல்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லை” என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“ஐ.நா. அமைப்பின் உதவி செய்யும் குழுக்கள், அரசு மற்றும் தனியார் துறைகள் சார்பில் காசாவுக்கு லொறிகள் மூலம் அத்தியாவசிய பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நிவாரணம் மற்றும் அத்தியாவசிய பொருட்களுடன் செல்லும் லொறிகளில் திருட்டு சம்பவங்கள் அதிகளவிலும், கொள்ளை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆங்காங்கே சிறிய திருட்டுகள் மட்டுமே நடைபெற்றுள்ளன.

“இஸ்ரேல் - காசா இடையிலான போர் நிறுத்தத்தின் மூன்றாம் நாளில் கிட்டத்தட்ட 900 லொறிகளில் உதவி பொருட்கள் காசாவுக்குள் சென்றுள்ளன.

இது ஒப்பந்தத்தில் கோரப்பட்ட 600 லொறிகளை விட கணிசமாக அதிகமாகும்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

வெனிசுலா

வெனிசுலாவில்

## அவசரநிலை பிரகடனம்



தென் அமெரிக்க நாடான வெனிசுலா எல்லையோர மாகாணங்களில், இராணுவ அவசர நிலையை அறிவித்து கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ உத்தரவிட்டுள்ளார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் கக்கடா மாகாணத்தில், பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் செயற்படுகின்றன. அவர்கள் அண்டை நாடான கொலம்பியாவின் எல்லைக்குள் நுழைந்து அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

குறிப்பாக அப்பாவி மக்கள் மற்றும் பொதுச்சொத்துகளைக் குறிவைத்து அவர்கள் தாக்குதல் நடத்துவதால் அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதனைத் தடுக்க எல்லைப் பகுதியில் கொலம்பியா இராணுவ வீரர்களை நிலைநிறுத்தியுள்ளது.

அந்தவகையில், கொலம்பியா எல்லை வழியாகக் கிளர்ச்சியாளர்கள் நுழைந்தனர். அப்போது அவர்களைத் தடுக்க முயன்ற இராணுவ வீரர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பயங்கர மோதல் நடைபெற்றது. இந்த மோதலில் இருதரப்பிலும் இதுவரை 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனால் அங்குப் பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால் நிலைமையைச் சமாளிக்க வெனிசுலா எல்லையோர மாகாணங்களில் இராணுவ அவசர நிலையை அறிவித்து, கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ உத்தரவிட்டுள்ளார்.

தமிழகம்

சீமான் வீடு முற்றுகை:

## போராட்டம் நடத்தியவர்கள் கைது



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் உருவபொம்மையை எரித்துப் போராடியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெரியார் குறித்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் சர்ச்சை பேச்சைக் கண்டிக்கும் வகையில், பெரியார் கூட்டமைப்பு மற்றும் மே 17 இயக்கத்தினர், புதன்கிழமை (22) காலை அவரது வீட்டை முற்றுகையிடவுள்ளதாக அறிவித்திருந்தனர்.

முன்னதாக இது தொடர்பான சுவரொட்டிகள் சென்னை மாநகர் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன. சென்னை - நீலாங்கரையில் உள்ள சீமான் வீடு முன்பாகவும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதனிடையே, சென்னை நீலாங்கரையில் முற்றுகையிடும் அமைப்பினருக்கு எதிர்ப்பு தெரிவிக்க சீமான் வீடு முன்பாக ஏராளமான நாம் தமிழர் கட்சியினரும், செவ்வாய்க்கிழமை(21) இரவு முதலே குவிந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, நீலாங்கரையில் உள்ள நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெரியாரை அவமதித்த சீமானைக் கைது செய்யக் கோரி, புதன்கிழமை (22) போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோர் சீமான் வீடு அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர். சீமானுக்கு எதிராக கோஷங்களும் எழுப்பப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம்

மகா கும்பமேளாவால்

## 8 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

உத்தரப்பிரதேச மாநிலம் - பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா 8 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான என்எல்பி சர்வீசஸ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“பிரயாக்ராஜில் 45 நாட்கள் நடைபெறும் மகா கும்பமேளா 1.2 மில்லியன் அதாவது 12 இலட்சம் தற்காலிக வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 8 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் பயனடைவார்கள். இந்த தற்காலிக வேலைவாய்ப்புகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உந்துசக்தியாக மாறியுள்ளது.



சம்பியன்ஸ் லீக்:

# பொலொக்னாவிடம் தோற்ற டொட்டமுண்ட்

### சமநிலையில் ஜுவென்டஸ் – ப்ரூகே போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான பொலொக்னாவின் மைதானத்தில் புதன்கிழமை(22) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை செர்ஹௌ குய்ரசி பெற்றதோடு, பொலொக்னா சார்பாக திஜ்ஸ் டலிங்கா, சாமுவேல் லிங்-ஜுனியர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், பெல்ஜியக் கழகமான கிளப் ப்ரூகேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பெண்டெலிஸ்கா கழகமான பயேர் லெவர்குசனுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது. மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜூலியன் அல்வரேஸ் பெற்றதோடு, லெவர்குசன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பியர்ரோ ஹின்கபி பெற்றிருந்தார்.

இது தவிர, தமது மைதானத்தில் நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியுடனான போட்டியில், 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலும், போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 5-4 என்ற கோல் கணக்கில் வென்ற லா லிகா கழகமான பார்சிலோனாவும் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெறுவதை இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே உறுதிப்படுத்தின.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

## எட்டாமிடத்துக்கு முன்னேறிய சௌட் ஷகீல்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் எட்டாமிடத்துக்கு பாகிஸ்தானின் சௌட் ஷகீல் முன்னேறியுள்ளார்.


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக முதலாவது டெஸ்டில் 86 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே 11ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜோ றூட், 2.ஹரி ப்றூக், 3.கேன் வில்லியம்சன்,
4.யஷஸ்வி ஜைஸ்வால், 5.ட்ரெவிஸ் ஹெட்,
6.தெம்பா பவுமா, 7.கமிந்து மென்டிஸ்,
8.சௌட் ஷகீல், 9.ஸ்டீவன் ஸ்மித், 10.றிஷப் பண்ட்.

மேற்படி, டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பாகிஸ்தானின் நொமன் அலி, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 11ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை யடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.பற் கமின்ஸ்,
3.ககிஸோ றபாடா, 4.ஜொஷ் ஹேசில்வூட்,
5.மார்கோ ஜன்சன், 6.மற் ஹென்றி,
7.நேதன் லையன், 8.பிரபாத் ஜெயசூரிய,
9.நொமன் அலி, 10.இரவீந்திர ஜடேஜா,

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.இரவீந்திர ஜடேஜா, 2.மார்கோ ஜன்சன்,
3.மெஹிடி ஹஸன் மிராஸ், 4.பற் கமின்ஸ்,
5.ஷகிப் அல் ஹஸன்.



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்

## அரையிறுதியில் ஸ்வியாடெக்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் தகுதி பெற்றுள்ளார்.

புதன்கிழமை (22) நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில் உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான எம்மா நவரோவை எதிர்கொண்ட போலந்தின் ஸ்வியாடெக், 6-1, 6-2 என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில் உலகின் மூன்றாம்நிலை வீரரான கார்லோஸ் அல்கரேஸை எதிர்கொண்ட ஏழாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச், 4-6, 6-4, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

நான்கு தொடர் தோல்விகளையடுத்து

## நுரி ஷகினை நீக்கிய டொட்டமுண்ட்

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடரில் தடுமாறுவதோடு, ஜேர்மனிய கிண்ணத் தொடரிலிருந்து பொரூசியா டொட்டமுண்ட் வெளியேற்றப்பட்டதையடுத்து தலைமைப் பயிற்றுவிப்பாளர் நுரி ஷகினை பொரூசியா டொட்டமுண்ட் நீக்கியுள்ளது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் 1-2 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான பொலொக்னாவிடம் இன்று அதிகாலை தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே இச்செய்தி வெளியாகியிருந்தது.

கடந்தாண்டு ஜூன் மாதத்திலேயே எடின் டெர்ஸிக்கை சஹின் பிரதியிட்டிருந்தார். புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 10ஆம் இடத்தில் டொட்டமுண்ட் காணப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 23, ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.